**<u>சுருக்கம்</u>**

மேல்முறையீடு – ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை – வேலூர் மாவட்டம் – திரு.எஸ்.தணிகாச்சலம், உதவிப் பொறியாளர் (ஊரக வளர்ச்சி), மாதனூர் ஊராட்சி ஒன்றியம் – ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரால் வழங்கப்பட்ட 'கண்டனம்' எனும் தண்டனையை எதிர்த்து மேல்முறையீடு – ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (இ3) துறை

அரசாணை (டி) எண்.182 நாள் 15.4.2010

படிக்கப்பட்டவை

1. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் காரணம் கேட்கும் கடித எண்.33262/04/டிபிசி 1.1, நாள் 14.12.2004.
2. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் செயல்முறை எண்.33262/04/ டிபிசி 1.1, நாள் 18.2.2006.
3. திரு.எஸ்.தணிகாசலம், உதவிப்பொறியாளர் (ஊவ) அவர்களின் மேல்முறையீட்டு மனு நாள் 3.5.2006.
4. அரசு கடித எண்.22266/இ3/2006–4, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள் 22.2.2007.
5. செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் கடித எண்.1736/டிசிடி–அ1/2007–1, நாள் 11.9.2009.

-----

**<u>ஆணை:-</u>**

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் காரணம் கேட்புக் கடிதத்தில், திரு.எஸ்.தணிகாசலம், உதவிப் பொறியாளர், கணியம்பாடி ஊராட்சி ஒன்றியம் அவர்கள் மீது தமிழ்நாடு குடிமைப் பணி (ஒழுங்கு மற்றம் மேல்முறையீடு) விதிகளில், விதி 17 (அ)ன் கீழ், கீழ்காணும் குற்றச்சாட்டுகளை சுமத்தி விளக்கம் கோரினார்.

**<u>குற்றச்சாட்டு.1</u>**

கணியம்பாடி ஊராட்சி ஒன்றிய பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டுள்ள பல்வேறு திட்டப் பணிகள் மாவட்ட ஆட்சித் தலைவர் ஆய்வின் போது முடிக்கப்படாமல் நிலுவையில் உள்ளது கண்டறியப்பட்டுள்ளது. ஆனால், வட்டார வளர்ச்சி அலுவலரின் மாத முன்னேற்ற அறிக்கையில் முடிக்கப்படாத பணிகள் முடிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டமை.

**<u>குற்றச்சாட்டு.2</u>**

திட்டப் பணிகளுக்கான நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு பணிகளை முடிக்க போதிய கால அவகாசம் வழங்கப்பட்ட நிலையிலும், பணிகளை முடிக்காமை.

**குற்றச்சாட்டு.3**

திட்டப்பணிகள் முடிக்கப்பட காலக்கெடு நிர்ணயம் செய்யப்பட்டும், இதுகுறித்து மாதாந்திர ஆய்வுக் கூட்டத்தின் போது மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அறிவுரைகள் வழங்கியும் பணிகளை உரிய காலத்தில் முடிக்காமல் முடிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்து உயர் அலுவலர்களை ஏமாற்றியது.

**குற்றச்சாட்டு.4**

உயர் அலுவலர்களின் அறிவுரைகளுக்குக் கீழ்ப்படியாமை

**குற்றச்சாட்டு.5.**

பொறுப்புள்ள அரசு பணியிலுள்ள திரு.எஸ்.தணிகாசலம், உதவிப் பொறியாளர், ஊராட்சி ஒன்றியம், கணியம்பாடி என்பவர் தனது கடமை மற்றும் பொறுப்புகளிலிருந்து தவறியதன் மூலம் தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் நன்னடத்தை விதிகள், விதி 20 (1)ஐ மீறியது.

மேற்குறிப்பிட்ட குற்றச்சாட்டுகள் குறித்து, திரு.எஸ்.தணிகாசலமிடமிருந்து விளக்கங்கள் பெற்று பின்னர் இந்நிகழ்வினை விதிகளின்படி பரிசீலித்து மேலே இரண்டில் படிக்கப்பட்ட செயல்முறைகளில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் “கண்டனம்” எனும் தண்டனையை திரு.எஸ்.தணிகாச்சலம், உதவிப் பொறியாளர் (ஊவ) அவர்களுக்கு எதிராக வழங்கி இறுதி ஆணை வெளியிட்டார்.

2. மேலே மூன்றில் படிக்கப்பட்ட கடிதத்தில் திரு.எஸ்.தணிகாச்சலம், உதவிப் பொறியாளர் (ஊவ), ஊரக வளர்ச்சி இயக்குநரால் தனக்கு வழங்கப்பட்ட ‘கண்டனம்’ எனும் தண்டனையை எதிர்த்து அரசிற்கு மேல்முறையீடு செய்துள்ளார். இம்மேல்முறையீட்டு மனு தமிழ்நாடு குடிமைப் பணி (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகளில் குறிப்பிட்ட கால வரம்பிற்குள் விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. எனவே மேலே நான்கில் படிக்கப்பட்ட அரசு கடிதத்தில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறைகள் 18 (a) (i)ன்படி மேல்முறையீட்டின் மீது தேர்வாணையத்தின் கருத்து கோரப்பட்டது.

3. மேலே ஐந்தில் படிக்கப்பட்ட கடிதத்தில் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் செயலாளர் கீழ்கண்டவாறு தேர்வாணையத்தின் கருத்தினை தெரிவித்துள்ளார்.

> “இவ்வழக்கில் உடன் குற்றவாளியான திரு.து.கோ.கேசவன், வட்டாா வளர்ச்சி அலுவலர் 31.12.2003 அன்று வயது முதிர்வின் காரணமாக பணியிலிருந்து ஓய்வு பெறுவதால் கடுமையாக எச்சரித்து விடப்பட்டுள்ளார். மேலும் திருமதி.சி.நா.இராஜகுமாரி, வட்டார வளர்ச்சி அலுவலர் அவர்களுக்கு வழங்கப்பட்ட கண்டனம் எனும் தண்டனை மேல்முறையீட்டில் விலக்கிக் கொள்ளப்பட்டு “எச்சரிக்கை” வழங்கப்பட்டுள்ளது. எனவே உடன் குற்றவாளிகள் இருவரும் எச்சரித்துவிடப்பட்ட நிலையில், இந்நேர்விலும் மேல்முறையீட்டாளரின் முகாந்திரத்தினை ஏற்று இம்மேல்முறையீட்டை அனுமதிக்கலாம் என்று தேர்வாணையம் அரசுக்கு ஆலோசனை வழங்குகிறது.”

4. அரசு, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் கருத்தினை உரிய ஆவணங்களுடன் கவனமாக நன்கு ஆய்வு செய்தது. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் கருத்தினை ஏற்று, வேலூர் மாவட்டம் மாதனூர் ஊராட்சி ஒன்றியம், முன்னாள் உதவிப் பொறியாளர் திரு.எஸ்.தணிகாசலம் அவர்களின் மேல்முறையீட்டு மனுவினை அனுமதிக்கலாமென்றும் மேலே 1ல் படிக்கப்பட்ட ஊரக வளர்ச்சி இயக்குநரின் செயல்முறைகளில் வேலூர் மாவட்டம், மாதனூர் ஊராட்சி ஒன்றிய உதவிப்பொறியாளர் (ஊவ),

திரு.எஸ்.தணிகாச்சலம், அவர்களுக்கெதிராக வழங்கிய கண்டனம் என்னும் தண்டனை ரத்து செய்து ஆணையிடலாமென முடிவெடுத்து அவ்வாறே அரசு ஆணையிடுகின்றது.

5. திரு.தணிகாசலம், உதவிப் பொறியாளர் (ஊவ) அவர்களுக்கு மேலே 4ல் படிக்கப்பட்ட கடிதத்தின் நகல் இத்துடன் இணைத்தனுப்பப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க.அஷோக் வர்தன் ஷெட்டி,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
திரு.தணிகாசலம்,
முன்னாள் உதவிப் பொறியாளர் (ஊவ)
மாதனூர் ஊராட்சி ஒன்றியம்,
வேலூர் மாவட்டம். (வழியாக : ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர், சென்னை–15)
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர், சென்னை–15
மாவட்ட ஆட்சித் தலைவர், வேலூர் மாவட்டம்.
செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை–6
மாநில தலைமை கணக்காயர், சென்னை–18/35
கருவூல அலுவலர், வேலூர் மாவட்டம்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.